Q23;38 2119
N57
113035

புத்[redacted]ான [redacted]வகும் புற்றூர்



18 JAN 1958
MADRAS

23 38.2(192.P

# தொண்டேஸ்வரர் கோயில் வரலாறு.

( அம்மாபேட்டை. )

N158
3035

உ

புத்தூர் என வழங்கும் புற்றூர்

# ஸ்ரீ புற்றிடங்கொண்டேஸ்வரர் கோயில் வரலாறு.

(அம்மாபேட்டை.)

★

திருச்சிராப்பள்ளி ஓய்வுபெற்ற தமிழ் ஆசிரியரும்,
அறநிலையப் பாதுகாப்பு இலாகா (H. R. & C E) ஆதரவில்
பல கோயில் வரலாறுகளை எழுதியவரும் ஆகிய

திரு. R. பஞ்சநதம் பிள்ளை அவர்களால்

எழுதப்பெற்று

மேற்படி தேவஸ்தான நிர்வாக அதிகாரி

திரு. K. சின்னையா அவர்கள்

TRUSTEES:-

திரு. K. இராமச்சந்திர பாண்டியர் அவர்கள்

திரு. K. பாலகிருஷ்ண பாண்டியர் அவர்கள்

ஆகியோரால் வெளியிடப்பட்டது.

★

*தேவஸ்தான வெளியீடு.*

1957.

★

உரிமை செய்யப்பெற்றது.

★

தஞ்சை வெற்றிவேற் பதிப்பகத்தில் அச்சிடப்பட்டது.

விலை 4 அணா — 25 ந. பை.

O2u3:38.2119Q.P
N57

TAMIL NADU ARCHIVES LIBRARY
MADRAS
113035

# முன்னுரை.

தெய்வ உணர்ச்சியை உண்டாக்கும் சிறப்பிடங்களாக ஆன்றோர்கள் அமைத்த ஆலயங்கள் விளங்குகின்றன. "ஆலயந் தொழுவது சாலவும் நன்று" என்ற முன்னோர் மொழியின் படி கோயில்களுக்குச் சென்று வழிபடுதல் மிகவும் நன்று. மேலைத் தஞ்சை ஜில்லா—பாபநாசம் தாலுகாவில், தஞ்சாவூர்—நாகூர் புகைவண்டி மார்க்கத்தில், அம்மாபேட்டை ரயில் நிலையத்திலிருந்து வடகிழக்கில், **புத்தூர்** என வழங்கும் **புற்றூரில் ஸ்ரீ புற்றிடங்கொண்டேஸ்வரர் கோயில்** உள்ளது. கோயிலுக்கு வருவோர் கோயிலின் பெருமைகளையும் அறிந்து கொள்வது நலம். சென்னை அறநிலைய பாதுகாப்பு இலாகா **(Hindu Religious and Charitable Endowments)** அனுப்பிய சுற்றறிக்கையின்படி இவ்வரலாறு சுருக்கமாய் எழுதப்பெற்று, **H. R. & C. E.** துணை ஆணையாளர் **(Dy. Commissioner)** திரு **S. கணேசம் பிள்ளை B. A.,** அவர்களால் ஒப்புதல் செய்யப்பெற்றது.

பழங்காலச் சின்னங்களாகிய கோயிற் சிற்பங்களைப் பாதுகாப்பதிலும், தல வரலாறுகளை வெளியிடச் செய்வதிலும் தற்போதுள்ள தலைவர்கள் வேண்டுவன செய்து வருகிறார்கள். இதில் கோயில் விளக்கமும், தலப் பெருமைகளும், துதிப் பாடல்களும் சேர்க்கப் பெற்றுள்ளன. அன்பர்கள் படித்து ஸ்ரீ புற்றிடங்கொண்ட பெருமான் திருவருளைப் பெறுவார்களாக.

**திருச்சிராப்பள்ளி**
**மலைக்கோட்டை**
28—9—57.

**R. பஞ்சநதம் பிள்ளை,**
தமிழ் ஆசிரியர்.

## உள்ளடக்கம்.


| | | பக்கம். |
|---|---|---|
| 1. | கோயிலும், இருப்பிடமும் .... | .... 1—4 |
| 2. | கோயிலின் அமைப்பு .... | .... 4 |
| 3. | கோயிலின் படம் .... | .... 8 |
| | கெற்பகிரக கோபுரங்கள் (புகைப்படம்) | .... 9 |
| 4. | மூர்த்திகளின் பெயர்கள் .... | .... 10 |
| 5. | தீர்த்தங்கள் .... | .... 10 |
| 6. | தலப் பெருமைகள் .... | .... 10 |
| 7. | திருப்பணிகள் .... | .... 12 |
| 8. | சிற்பங்கள் .... | .... 13 |
| 9. | தினப்பூஜையும், விழாக்களும் | .... 13 |
| 10. | வருமானமும் சொத்துக்களும் | .... 14 |
| 11. | நிர்வாகம் .... | .... 14 |
| 12. | துதிப்பாடல் .... | 15-20 |


## கோயில் விளக்கம்.

**கோயில்—** ஸ்ரீ புற்றிடங்கொண்டேஸ்வரர் கோயில்.
**இடம்—** புத்தூர்—(அம்மாபேட்டை)
**மூலவர்—** ஸ்ரீ புற்றிடங்கொண்டேஸ்வரர்.
**அம்மன்—** சௌந்தரநாயகி.
**தீர்த்தம்—** ஊற்றுக்கிணறு.
**மரம்—** பாதிரி மரம்,

தஞ்சாவூர்—நாகூர் புகைவண்டி மார்க்கத்தில் அம்மாபேட்டை ரயில் நிலயத்துக்கு வடகிழக்கில் புற்றூர் உள்ளது. இது தற்போது புத்தூர் என வழங்குகிறது.

# புத்தூர் எனவழங்கும் புற்றூர் ஸ்ரீ புற்றிடங்கொண்டேஸ்வரர் கோயில் வரலாறு.

"புற்றிடங்கொண்ட புராதனனைப்
பூங்கோயில் மேய பிரானையார்க்கும்
பற்றிடம் ஆய பரம்பொருளைப்
பார்ப்பதி பாகனைப் பங்கயத்தாள்
அற்சனை செய்ய அருள்புரிந்த
அண்ணலை மண்மிசை வீழ்ந்திறைஞ்சி
நற்றமிழ் நாவலர்கோன் உடம்பால்
நன்மையின் தன்மையை மெய்ம்மை பெற்றார்."

(பெரிய புராணம்)

## 1. கோயிலும் இருப்பிடமும்.

எவ்வுயிர்க்கும் தாயாகித் தன்னை அன்புடன் வழிபடுவோர்க்குத் தஞ்சமென நிற்கும் தனிப்பரஞ்சுடராகிய தண்ணளி மிகுந்த இறைவன் — எறும்பு முதல் எறும்பி (யானை) ஈறான உயிர் அத்தனைக்கும் இன்னருள் வழங்கும் பெருமான்— அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய் விளங்கும் அண்ணல் உலகத்திலுள்ள பல உயிர்களும் துன்பம் நீங்கி இன்பம்பெற்று உய்யும்வண்ணம், ஆதியந்தங்கடந்த தன் அருவ நிலையிலிருந்து இறங்கி, இப்பூவுலகத்தில் ஆங்காங்குள்ள பல இடங்களில் உருவத் திருமேனிகொண்டு எழுந்தருளிப் பக்தியுடன் வழிபடும் அடியார்களுக்கு அருள் செய்து வருகின்றான். அத்தகைய சிறப்பிடங்களே ஆலயங்கள் ஆகும். பசுவின் உடல் முழுவதும் பால் மறைந்திருந்தபோதிலும், மடியின் மூலமாகவே பால் வெளிப்படுவது போலவும், சூரியன் எங்கும் பரவியிருந்தபோதிலும், பளிங்குக் கல்லின் மூலமே கிரணங்கள் வெளிப்படுவது போலவும், நிலத்துக்கடியில் நீர் இருந்தபோதிலும் தோண்டிய இடத்தில்தானே நீர் தோன்றுவதுபோலவும், இறைவன் எங்கும் வியாபித்திருந்தபோதிலும் பெரி

யோர்கள் அமைத்த ஆலயங்களில் உள்ள மூர்த்திகளின் மூலமாகவே இறைவன் வெளிப்பட்டு அன்பர்களுக்கு அருள் செய்வான். "இருஞ்சுரபிக் கெங்கும் உருக்காண ஒண்ணாத பால் முலைப்பால் விம்மி ஒழுகுவதுபோல வெளிப்பட்டருள்வன் அன்பர்க்கே," **(சிவஞான சித்தியார்)**

**"எங்கும் சிவனிருப்பன் ஆனாலும் ஏசற்ற**
**சங்கமத்தும் சற்குருவின் தன்னிடத்தும்—லிங்கத்தும்**
**ஆவினுடம் பெல்லாமும் ஆவரித்து நிற்கினும்பால்**
**பாவு முலைக் கண்மிகுதிப்பார்"**

**(சிவஞானப்பிரகாச வெண்பா.)**

ஆதலின் பெறுதற்கருமையான மனிதப் பிறவியைப் பெற்றவர் அனைவரும் கோயில்களில் குடிகொண்ட பசுபதியாகிய பரமனை அன்பினால் வழிபட்டு, அவன் வகுத்த நன்னெறியில் சென்று அவனருளைப் பெற முயலுதல் வேண்டும். "மானுடப் பிறவிதான் வகுத்தது மனவாக்காயத்து ஆனிடத்தைந்தும் ஆடும் அரன்பணிக்காக அன்றோ" என்று ஆன்றோரும் கூறியுள்ளார். "உடம்பினைப் பெற்ற பயனாவதெல்லாம் உடம்பில் உத்தமனைக் காண்" என்று ஔவையார் அறிவிக்கிறார்.

நமது முன்னோர்களின் நாகரிக வாழ்வுக்கு எடுத்துக்காட்டாக விளங்குவன முன்னோர்கள் எடுப்பித்த திருக்கோயில்களாகும். இவைகள் பக்தியை உண்டாக்கும் இடங்களாவதன்றிப் பெருஞ் சிறப்புச்செல்வங்கள் நிறைந்த பெட்டகங்களும் ஆகும். மேலும் மின்சார அணுக்கள் சேர்த்துவைக்கப்பெற்ற இடம் (**Power House**) போலத் தெய்வீகத் திருவருள் அணுக்கள் செறிந்த சிறப்பிடங்களாகும். எழுத்தின் ஒலி வடிவத்தை உணர்த்துவதற்கு வரிவடிவெழுத்து அமைந்தது போலக் கட்புலனால் காணமுடியாத கடவுளை வணங்குவதற்குக் கோயில்கள், கடவுளைக் காட்டும் சாதனங்களாக—சட்டங்களாக விளங்குகின்றன. இவைகளை நம் முன்னோர்கள் தம் உயிரினும் மேலாகப் பாதுகாத்துப் பின்வழியினராகிய நமக்கு அருஞ் செல்வங்களாக வைத்துச் சென்றார்கள். நாட்டின் நலத்துக்கும், மக்களின் நல்வாழ்வுக்கும் கோயில்கள் இன்றியமையாதன, வாழ்க்கைக் கடலில் அகப்பட்டுத் துன்புறும்



மக்களுக்குக் கோயில்கள் கலங்கரை விளக்கங்களாக (**Light House**) விளங்குகின்றன. "கோயில் விளங்கக் குடி விளங்கும். ஆலயந் தொழுவது சாலவும் நன்று" என்பவை ஆன்றோர் கூறிய அனுபவ மொழிகளாகும்.

தென்னாடாகிய தமிழ் நாட்டில் பெருமான் உறையும் கோயில்கள் பல உள்ளன, அவை சிவன் கோயில்கள், முருகன் கோயில்கள், திருமால் கோயில்கள், அம்மன் கோயில்கள் முதலியன. இவைகளில் அந்தந்த சமயத் தலைவர்களால் பதிகம் பாடப்பெற்ற தலங்களும், பெயர் மட்டும் குறிக்கப்பெற்ற வைப்புத் தலங்களும், தலபுராணங்களைக் கொண்ட கோயில்களும், புலவர்களால் தனிப்பாடல் பெற்ற தலங்களும், பிற்காலத்தில் பக்தர்களால் அமைக்கப் பெற்ற அபிமானத் தலங்களும் அடங்கியுள்ளன. இவைகளில் அபிமானத் தலங்களில் ஒன்றாக விளங்குவது அம்மாபேட்டை—புத்தூரில் உள்ள ஸ்ரீ புற்றிடங்கொண்டேசுவரர் கோயிலாகும்.

எப்போதும் வற்றாத நீர்ப்பெருக்கையுடையது காவிரிநதி. இதற்குப் பொன்னி, தென்கங்கை முதலிய பெயர்களும் உண்டு. இதன் பெருமைகள் சங்கநூல்களில் விதந்து கூறப் பெற்றுள்ளன. "வான்பொய்ப்பினும் தான் பொய்யா, மலைத் தலைய கடற்காவிரி" என்று பட்டினப்பாலைகூறும். "அன்னாலை பாகத்தை ஆளுடையநாயகி உண்ணெகிழ் கருணையின் ஒழுக்கம் போன்றது" என்று சேக்கிழார் கூறுகின்றார். இந்தக் காவிரி நதி பாய்ந்து சோழநாட்டை வளப்படுத்துகிறது. சோழ நாட்டிற்குப் பல பெயர்கள் உண்டு. அனுவளவநாடு, சென்னிநாடு, அபயநாடு, கிள்ளிநாடு, செம்பியர்நாடு, அகலங்கநாடு, நீர்நாடு, பொன்னிநாடு முதலியன. "சோழவளநாடு சோறுடைத்து" "நெல்லுடையான் நீர்நாடர்கோ" என்றும் பழமொழிகள் இந்நாட்டின் சிறப்பைத் தெரிவிக்கும். சோழ நாட்டின் பெருமையை மகாவித்வான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் பின்வருமாறு காட்டுகிறார்.

**"பூவினுள் பதுமம்போலும் புருடருள் திருமால் போலும்**
**காவினுள் கற்பம் போலும் கலைகளுள் ஞானம் போலும்**
**ஆவினுள் சுரரான் போலும் அறத்தள் இல்லறமே போலும்**
**நாவினுள் மெய்ந்நாப் போலும் நாட்டினுள் சோழநாடு.**

இத்தகைய பெருமைகளையுடைய சோழநாட்டில், மேலைத் தஞ்சை ஜில்லா—பாபநாசம் தாலுகாவில், தஞ்சாவூர்—நாகூர் புகைவண்டி மார்க்கத்தில் அம்மாபேட்டை ரயில் நிலையத்திலிருந்து வடகிழக்கில் அரைமைல் தூரத்தில் புத்தூர் எனப்படும் புற்றூரில் **ஸ்ரீ புற்றிடங்கொண்டேஸ்வரர் கோயில்** உள்ளது. தஞ்சாவூர்-மன்னார்குடி மோட்டார்பஸ் மார்க்கத்தில், அம்மாபேட்டை பஸ் நிலையத்திலிருந்து தென்கிழக்கில் முக்கால் மைல் தூரத்தில் உள்ளது. ரயில் மூலமாகவும், மோட்டார் மூலமாகவும் இத்தலத்தை அடையலாம். இவ்வூருக்குக் கிழக்கில் கோயில்வெண்ணியும், தெற்கில் வடுவூரும், மேற்கில் உடையார்கோயிலும், வடக்கில் அவளிவநல்லூரும் அமைந்துள்ளன. இவ்வூரில் ஜில்லா போர்டைச் சேர்ந்த தொடக்கப் பள்ளியும், தபால் நிலையமும் இருக்கின்றன. ஜனத்தொகை சுமார் 2000. பெரும்பாலும் கள்ளர்களும், அம்பலகாரர்களும் பயிர்த்தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள். அம்மாபேட்டையில் கோரைப்பாய்களும், பட்டாடைகளும் தயாரிக்கப்படுகின்றன. தொழில்களால் சிறப்புற்ற ஊர்கள் பேட்டை எனப்படும். அதன்படி இவ்வூரில் பல கைத்தொழில்கள் நடைபெறுகின்றன.

கோயில் இருக்கும் இடம் புத்தூர். ஆதியில் இவ்விடம் புற்றாயிருந்து மண்வெட்டியால் தோண்டியபோது பூமியில் லிங்கம் காணப்பெற்றதால் புற்றூர் என்று பெயர் ஏற்பட்டு தற்போது புத்தூர் என வழங்குகிறது.

தமிழ் நாட்டில் புத்தூர் என்று பெயர்கொண்ட பல ஊர்கள் உள்ளன. புதிதாய்த் தோன்றிய ஊர் புத்தூர் எனப்படும். புதுமையான—அதிசயமான—எழிலைக்கொண்ட ஊர்களும் புத்தூர் என வழங்கும். பாண்டி நாட்டில் பாடல் பெற்ற திருப்புத்தூர் என்ற தலமும் உள்ளது. அவைகளைப் போலவே இந்தப் புற்றூரும், அதிசயிக்கத்தக்க முறையில் புதுமையான எழிலுடன் விளங்குகிறது.

## 2. கோயிலின் அமைப்பு.

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்னும் நால்வகை நிலங்களில் மருத நிலமாகிய நன்செய் நிலங்களுக்கு நடுவில்



கோயில் அமைந்துள்ளது. உடலுக்கு உணவைத் தரும்படியான வயல்களுக்கு நடுவில் ஆன்ம உணவாகிய பெருமான் எழுந்தருளியுள்ளான். கோயிலைச் சுற்றிலும் சோலைகளும், ஏரிகளும், நீரோடைகளும் சூழ்ந்துள்ளன. பறவைகளின் இன்னொலி கேட்பதற்கு இனிய கீதமாக விளங்கும் கோயில் அழகாயுள்ளது. மேற்கு நோக்கியுள்ளது. முன் கோபுரம் மூன்று கண்களையுடையதாய் முக்கண்களையுடைய பெருமானைப்போல் விளங்குகிறது. உட்பிராகாரத்தில் முன்னே நந்தி மண்டபமும், வடக்கில் வாகன அறையும், கிழக்கில் மடைப்பள்ளியும் தெற்கில் பாதிரி மரமும், கிணறும், தேவஸ்தான அலுவலகமும் உள்ளன. மதிலுக்கு வெளியில் வெளிவீதியாக ஊருக்குள் அமைந்துள்ளது. உள்மண்டபத்தில் மூலவர் சந்நிதி மேற்கு நோக்கியும், அம்மன் சந்நிதி தெற்கு நோக்கியும், முருகன் சந்நிதி கிழக்கு நோக்கியும் உள்ளன. நடுமண்டபத்தில் விநாயகர், சனி முதலிய மூர்த்திகளின் சிலைகளும். அர்த்தமண்டபத்தில் சோமாஸ்கந்தர், நடராஜர் முதலிய உற்சவ விக்கிரகங்களும் உள்ளன. கோயிலிலும், கோபுரத்திலும் மின் விளக்குகள் பொருத்தப் பெற்றுள்ளன, கோயிலுக்கு எதிரில் நந்தவனமும், பக்கத்தில் ஏரியும் அமைந்துள்ளன. கோயில் சிறியதாயினும் பெருமை பொருந்தியது.

இக்கோயில் சிவபெருமானுக்குரிய திருக்கோயிலாக இருப்பதுடன் முருகப்பெருமானுக்குரிய முக்கிய தலமாகவும் விளங்குகிறது. மலைப்பகுதியாகிய குறிஞ்சி நிலத்துக்குரியவன் முருகன் ஆவன். குறிஞ்சி நிலம் சிறப்பிடமாயினும் காடு, சோலை, ஆறு, குளம், சதுக்கம், சந்தி, மன்றம் முதலிய பிற இடங்களும் முருகனுக்குரிய இடங்கள் ஆகும்.

**"காடுங்காவும் கவின்பெறு துருத்தியும்**
**யாறுங்குளனும் வேறுபல் வைப்பும்**
**சதுக்கமும் சந்தியும் புதுப்பூங்கடம்பும்**
**மன்றமும் பொதியிலும் கந்துடை நிலையினும்"**
**(திருமுருகாற்றுப்படை)**

முருகு என்பது இளமை, அழகு, மணம், தெய்வத்தன்மை முதலிய பொருள்களைக் குறிக்கும். இவைகளையுடையோன் முருகன் ஆவான்.

"மணங்கமழ் தெய்வத்து இளநலம் காட்டி"— நக்கீரர்.

இவ்வுயர் குணங்களைப் பெற விரும்புவோர் முருகனை வழிபடுவர். எப்பொருளையும் கடந்து அருவமாய், ஜோதிப்பிழம்பாய் நின்ற இறைவன், உயிர்களுக்கு இன்பந் தந்து உய்விக்க வேண்டித் தன் உயர்ந்த நிலையிலிருந்து வான், காற்று, தீ, நீர், நிலம் என்றும் ஐந்து பூதங்களின் வழியே படிப்படியாக இறங்கிப் பூமியில் உருவத்திருமேனியுடன், கருணைகூர் முகங்கள் ஆறும், கரங்கள் பன்னிரண்டுங்கொண்டு முருகன் முதலிய பல பெயர்களைப் பெற்று ஆங்காங்கு வீற்றிருந்து அடியார்களுக்கு அருள் செய்து வருகிறான்.

**"அருவமும் உருவுமாகி**
**அநாதியாய்ப் பலவாய் ஒன்றாய்**
**பிரமமாய் நின்ற சோதிப்**
**பிழம்பதோர் மேனியாகக்**
**கருணைகூர் முகங்கள் ஆறும்**
**கரங்கள் பன்னிரண்டுங்கொண்டே**
**ஒருதிரு முருகன் வந்தாங்கு**
**உதித்தனன் உலகம் உய்ய" (கந்தபுராணம்)**

குறிஞ்சி நிலத் தலைவனான குமரன்—முன்னே வந்தெதிர் தோன்றும் முருகப்பெருமான், பல பெயர்களுடன் விளங்குகிறான். அரன்மகன், ஆறுமுகன், குகன், குழகன், சாமிநாதன், செவ்வேள், கங்கை மைந்தன், கார்த்திகேயன், மால்மருகன், மயிலேறும்பெருமான், குன்றமெறிந்தோன், சரவணபவன், கடம்பன், சேவற்கொடியோன், குறிஞ்சிவேந்தன், சேந்தன், காங்கேயன், சிலம்பன், வள்ளி மணவாளன், தெய்வயானை காந்தன், புலவன் முதலிய பெயர்கள் முருகப்பெருமானுக்கு வழங்கிவரும். முருகனுக்கு இச்சா சக்தி, கிரியா சக்தி, ஞான சக்தி என்றும் மூன்று வகைச் சக்திகள் உண்டு. இவைகள் முறையே வள்ளி, தெய்வயானை, வேல் முதலிய பொருள்களாக விளங்குகின்றன. ஞானத்தின் சின்னமாகிய வேலாயுதத்தைக் கையில் தாங்கியுள்ளான். முருகப்பெருமான் உலகில் தோன்றிச் சூரபத்மன் முதலிய அசுரர்களை அழித்துத்



தேவர்களைக் காப்பாற்றினான் என்பது வரலாறு. இவ்வாறே அகப்பகையாகிய அசுர குணங்களை—ஆணவம் முதலிய மலங்களைப் போக்கி அடியார்களுக்கு அருள் செய்கின்றான். சூரபத்மன் முடிவில், மயிலும் சேவலுமாய்த் தோன்றவே, முருகன், மயிலை வாகனமாகவும், சேவலைக் கொடியாகவும் அமைத்துக்கொண்டான்.


**" போர் அவுணன்—**
**அங்கம் இரு கூறாய் அடல் மயிலும் சேவலுமாய்த்**
**துங்கமுடன் ஆர்த்தெழுந்து தோன்றுதலும்—அங்கவற்றுள்**
**சீறும் அரவைப் பொருத சித்ரமயில் வாகனமாய்**
**ஏறிநடாத்தும் இளையோனே—மாறிவரு**
**சேவல் பகையைத் திறல்சேர் பதாகை என**
**மேவத்தனித்து உயர்த்த மேலோனே" (கந்தர்கலி வெண்பா)**

எனவே இக்கோயில் சிவபெருமானும், சிவகுமாரனான செவ்வேளும் எழுந்தருளிக் காட்சிகொடுக்கின்றார்கள். முருகன், குழந்தை வேலனாகத் தோற்றமளிக்கிறான். சிவபெருமானுடைய ஆறு திருமுகக் கண்களிலிருந்து தோன்றிய ஆறு தீப்பொறிகளே ஆறுமுகப் பெருமானாகத் தோன்றியதால் சிவபெருமானும் முருகப் பெருமானும் வேறல்லர். இதைச் சிவபெருமானே பார்வதிக்குக் கூறியதாகும்.

**" ஆதலின் நமது சக்தி ஆறுமுகனவனும் யாமும்**
**பேதகமன்றால் நம்போர் பிரிவிலன் யாண்டு நின்றான்**
**ஏதமில் குழவிபோல் வான்யாவையும் உணர்ந்தான் சீரும்**
**போதமும் அழிவில்வீடும் போற்றினர்க் கருளவல்லான்"**
**(கந்தபுராணம்)**


இவ்வாறு புறத்தே கோயில் கொண்டு விளங்கும் பெருமான் அன்பினால் வழிபடும் அடியார்களின் அகத்தாமரையிலும் வந்து தங்கி அருள் செய்வான். இவ்வித சிறப்புக்களையுடைய கோயிலின் சுற்றளவு கீழமேலடி 140, தென்வடலடி 80. கோயிலின் அமைப்பைக்காட்டும் படம் தனியே உள்ளது.

## 3. கோயிலின் படம்.




**எண்களின் விளக்கம் :**

1 முன் கோபுர வாயில்
2 வாகன மண்டபம்
8 மடைப்பள்ளி
4 அலுவலகம்
5 உள் வாயில்
6 மூலவர் சந்நிதி
7 சனீஸ்வரர்
8 விநாயகர்
9 அம்மன் சந்நிதி
10 சாமான் அறை
11 முருகன் சந்நிதி
12 பாதிரி மரம்
18 கிணறு
14 நந்தி மண்டபம்
15 யாகசாலே மேடை



கெற்பக்கிரக கோபுரங்களின் தோற்றம்.

## 4. மூர்த்திகளின் பெயர்கள்.

இக்கோயிலில் உறையும் பெருமானுக்கு ஸ்ரீ புற்றிடங் கொண்டேஸ்வரர் என்னும் பெயர் வழங்குகிறது. புற்றிலிருந்து லிங்கம் வெளிப்பட்டதால் இப்பெயர் ஏற்பட்டது (திருவாரூரில் கோயில் கொண்டிருக்கும் பெருமானுக்கும் இப்பெயர் வழங்குகிறது) அம்மனுக்கு சௌந்தரநாயகி என்னும் பெயர் விளங்குகிறது. அழகுடையவள் என்பது பொருள். பாதிரி மரம் கோயிலுக்குரிய மரமாகத் திகழ்கிறது.

## 5. தீர்த்தங்கள்.

கோயிலுக்குப் பக்கத்தில் நீர் வளப்பமுள்ள பெரிய ஏரி உள்ளது. இதில் பங்குனி உத்திர நாளில் மூர்த்திகள் புறப்பட்டு வந்து தீர்த்தங் கொடுக்கும். ஏரி நீர் மக்களுக்குப் பயன் படுவதைப்போலப் பெருமானின் திருவருட் செல்வமும் அடியார்களுக்கு உதவும். "ஏரி நிறைந்தனைய செல்வங்கண்டாய்" என்று அப்பர் கூறுகிறார். கோயிலுக்குள் ஓர் கிணறு உள்ளது. அபிஷேகம் முதலியவைகளுக்குப் பயன் படுகிறது. கிணற்றின் நீர் ஊற்றத்தைப் போலப் பெருமானின் திருவருள் ஊற்றும் தரிசிப்பவர்களுக்குக் குளிர்ச்சியைத் தரும்.

## 6. தலப்பெருமைகள்.

நீர்வளம் மிகுந்த நன்செய் நிலங்களுக்கு நடுவில் கோயில் அமைந்துள்ளது. கோயிலுக்குப் பக்கத்தில் ஏரி அமைந்துள்ளதால் தண்ணென்ற காற்று வீசிக்கொண்டிருக்கும். மூர்த்தி, தலம், தீர்த்தம் மூன்றிலும் சிறப்புடையது. புதுமையான தோற்றத்தையுடைய புற்றூராகிய புத்தூர்ப்பதியில் புற்றிடங்கொண்ட புராதனனாகப் பெருமான் விளங்குகிறான், ஒரு காலத்தில் புற்றாயிருந்த இடத்தில் பெருமான் வெளிப்பட்டுக் காட்சி கொடுத்ததால் புற்றிடங்கொண்டேசர் எனப் பெயர் பெற்றார். தமிழ் நாட்டில் புற்றை மூலஸ்தானமாகக்கொண்ட பல தலங்கள் உள்ளன. எனவே புற்று இருந்த ஊர், புற்றூராகிப் பிற்காலத்தில் புத்தூர் என மாறியிருக்கலாம். பஞ்ச



பூதத் தலங்களில் இது மண்ணின் கூறாய் அமைந்துள்ளது. புற்று மண்ணை மருந்தாகப் பயன்படுத்துவர். அது போலப் புற்றிடங்கொண்ட பெருமான் பிறவிப் பிணிக்கும் மருந்தாக விளங்குகிறான். "மந்திரமும் தந்திரமும் மருந்துமாகித் தீரா நோய் தீர்த்தருள வல்லானை" என்று அப்பர் கூறுகிறார். கோயிலில் பாதிரி மரம் தல விருட்சமாக உள்ளது. பாதிரி மரத்தைக்கொண்ட பிற ஊர்கள் திருப்பாதிரிப்புலியூர், பாடலவனமென்ற கருப்பூர் முதலியனவாகும். முற்காலத்தில் நல்ல மணமுண்டாவதற்குப் பாதிரி மலரைக் குளிர்ந்தநீரில் போட்டு வைப்பது வழக்கமாம். "ஒண்ணிறப் பாதிரிப்பூச் சேர்தலால் புத்தோடு தண்ணீர்க்குத்தான் பயந்தாங்கு" என்று நாலடியார் கூறுகிறது. "பாதிரிமுதல் கற்பூர மளவிய பரிமளஞ்சேர் சீதள அமுது" என்று இனிய பானத்தைப்பற்றித் திருவிளையாடற் புராணம் கூறுகிறது. அதுபோல இத்தலத்துப் பாதிரி மலர்கள் நல்ல மணத்தைக் கொடுத்து யாவர்க்கும் இன்பம் ஊட்டுகின்றது. இவ்விடத்தில் முருகப்பெருமான் குழந்தை வேலனாகக் காட்சி தருவது தனிப்பெருமையாகும். முருகனுக்கு உகந்த கார்த்திகை நாட்களில் விசேட அபிடேக ஆராதனைகள் நிகழும். கார்த்திகை என்பது முருகனுக்குப் பால் கொடுத்த அறுவகைப் பெண்களைக் குறிக்கும். அறுமீன் என்றும் சொல்வதுண்டு. அவர்களைக் குறிக்கும் நாளில், முருகனைக் கருதி வழிபடுவோர், தாம் விரும்பும் நலன்களைப் பெறுவர். "இன்னே பெறுதி நீ முன்னிய வினையே" என்று நக்கீரர் கூறுகிறார், இவைகள் புராணப் பெருமைகள், தற்கால நிலைமைக்கேற்ப இப்பக்கங்களில் பல கைத்தொழில்கள் நடைபெறுகின்றன. இவ்வூருக்குப் பக்கத்தில் பெருமாள்தொண்டி என்னுமிடத்தில் சில செப்புப் பட்டயங்கள் கிடைத்துச் சர்க்காரில் சேர்க்கப்பெற்றன.

இனி கல்வெட்டுக்களால் அறியப்படும் செய்திகள்;—இக்கோயிலில் கல்வெட்டுக்கள் இல்லை. இதன் பக்கத்திலுள்ள உடையார்கோயில் கல்வெட்டுக்களால் சில செய்திகள் தெரிய வருகின்றன. இத்தலப்பகுதி தென்கரை நித்தவிநோதவள நாட்டின் உட்பகுதியான வீரசோழவள நாட்டைச் சேர்ந்திருந்த

தாகத் தெரியவருகிறது. சோழமண்டலம் 9 வள நாடுகளாகவும், பல நாடுகளாகவும், கூற்றங்களாகவும் பிரிக்கப்பட்டிருந்தன. அவைகளுள் ஒன்று தென்கரை நித்தவிநோதவளநாடு. இது ஆலூர்க்கூற்றம், காந்தாரநாடு, கரம்பைநாடு, கிழார்க்கூற்றம், முடிச்சோழநாடு, நல்லூர்நாடு, பாம்புணிக்கூற்றம், பொய்யூர்க்கூற்றம், வெண்ணிக்கூற்றம், வீரசோழவளநாடு என்னும் பத்துப் பிரிவுகளைக்கொண்டு விளங்கியது. இவைகளுள் வீரசோழவள நாட்டைச் சேர்ந்தனவாகச் சேந்தங்குடி, குளப்பாடி, சிறுவெண்ணி என்னும் ஊர்கள் சொல்லப்படுகின்றன. வெண்ணி என்பது தற்போதுள்ள கோயில்வெண்ணி எனத் தெரிகிறது. இது தேவாரப் பாடல்பெற்ற தலம். வெண்ணியில் திருமாவளவனுக்கும், சேர பாண்டியர்களுக்கும் நிகழ்ந்த போரில் திருமாவளவன் வெற்றிபெற்றான். பகைவர் அழிந்தனர். சோழனுக்கு வெற்றியைத் தந்த வெண்ணியைக்கொண்ட வீரசோழவளநாட்டுப் பகுதியில் புத்தூர் என்னும் இத்தலம் அமைந்துள்ளது.

## 7. திருப்பணிகள்.

முன்னோர்கள் ஏற்படுத்திய திருக்கோயில்களுக்கு எவ்வித தீங்கும் நேராதபடி பாதுகாத்து அவ்வப்பொழுது ஆவன செய்யவேண்டும் புதிய கோயிலை அமைப்பதைப் பார்க்கிலும் பழமையான கோயிலைப் புதுப்பித்தல் மிக்க புண்ணியத்தைத் தரும் என்பர்.

**"மாதவர் மடங்களாதி வரதன் மந்திரங்களாதி**
**நாதமா லிங்கமாதி நளின புட்கரணியாதி**
**சேதமுற்றிடின் முன்போல் செய்பவர்க் குறுபலன்தான்**
**ஓதுமுன் செய்தோர் தம்மில் ஆயிரங்குணிதமோங்கும்"**

**(சிவபுண்ணியத்தெளிவு)**

அதன்படி இக்கோயிலில் பல திருப்பணிகள் நிறைவேறின, புத்தூர் திரு. காசிநாத பாண்டியர் அவர்கள் தர்மகர்த்தாவாக இருந்த காலத்தில் கோயிலின் மண்டபங்கள், விமானங்கள், மடைப்பள்ளி, கோபுரம் முதலியன புதுப்பிக்கப்பெற்றுச் சுமார் பத்தாயிரம் ரூபாய் செலவில் திருப்பணிகள் நடைபெற்று 1946ல் விய ஆண்டு ஆவணி மாதம் 23ம் நாளில் கும்பாபிஷேகம் சிறப்பாய் நடைபெற்றது. பிறகு 12—1—55ல் மின்சார விளக்கு விழா நிகழ்ந்தது. எனவே புத்தூர்ப்பதியில் இக்கோயில் புத்தம் புதியதாகக் காட்சியளிக்கிறது.



## 8. சிற்பங்கள்.

பழமையான இக்கோயில் புதுப்பிக்கப்பெற்று அழகுடன் விளங்குகிறது. முன்கோபுரம் மூன்று கண்களையுடையது. விமானங்கள் நல்ல சிற்பங்களையுடையன. மூலச்சிலைகளும், உற்சவ விக்கிரகங்களும் சிறிய வடிவங்களில் காண்பதற்கு இனிமையாய் விளங்குகின்றன. பாதிரி மரம் உயிர்ச்சிற்பமாகப் பசுமையுடன் விளங்குகிறது.

## 9. தினப்பூஜையும் விழாக்களும்.

இக்கோயிலில் தினந்தோறும் காலை, உச்சி, மாலை, இரவு ஆகிய நான்கு காலங்களிலும் மூர்த்திகளுக்கு அபிஷேக ஆராதனைகள் நடைபெறுகின்றன. பூஜை நேரங்களில் மணி அடிக்கப்படுகிறது, அந்தந்தக் காலங்களில் வந்து தரிசித்து வழிபட்டால் மிக்க புண்ணியமுண்டு.

**"காலைதொழ அற்றைவினைக் கட்டகலும் கட்டுச்சி**
**வேலைதொழ இப்பிறப்பில் வெந்துயர் போம்—மாலையினில்**
**வந்து சிவன்றுளை வந்தித்தால் ஏழ்பிறப்பின்**
**வெந்துயர மெல்லாம் விடும்"**

**(சிவதரிசன மகத்துவம்)**

சில ஆண்டுகளுக்கு முன் கோயிலில் இரண்டு காலப்பூஜையே நடைபெற்றுவந்து, தற்போது நான்கு காலப்பூஜைகள் நடைபெற்றுவருகின்றன. கோயில்களில் பூஜைகள் சரிவர நிகழ்ந்தால்தான் நாட்டில் மழையும், செல்வங்களும் பெருகும்.

ஆண்டுதோறும் பங்குனி மாதத்தில் பெருவிழா—பிரம்மோற்சவம் நடைபெறும். பத்து நாட்களிலும் சுவாமி பல வாகனங்களில் புறப்பட்டுவந்து காட்சி கொடுக்கும. பத்தாம் நாள் தீர்த்தவாரி நிகழும், இவ் விழாவுக்கு வெளியூர்க் கூட்டம் மிகுதியாகவரும். மாதந்தோறும் கார்த்திகை நாட்களில் முருகப்பெருமானுக்கு அபிஷேக ஆராதனைகள் நிகழும். மேலும் நவராத்திரி, கந்தர் சஷ்டி, திருவாதிரை முதலிய சிறப்பு நாட்களில் விழாக்கள் நடைபெறும், "மண்ணினிற் பிறந்தார் பெறும் பயன் மதிசூடும், அண்ணலார் அடியாரை அமுது செய்வித்தல், கண்ணினால் அவர் நல் விழாப் பொலிவு கண்டார்தல்" என்னும் பெரிய புராண வாக்கின்படி, மனிதராகப் பிறந்தவர் அனைவரும் பெருமானுடைய திருவிழாக் காட்சிகளைத் தரிசித்துப் பேறு பெறுவார்களாக.

## 10. வருமானமும் சொத்துக்களும்.

இக்கோயிலுக்குச் சுமார் 90 ஏகர் நிலங்கள் உள்ளன. 45 ஏகர் நன்செய் நிலங்களும், 45 ஏகர் புன்செய் நிலங்களும் ஆகும், இவைகள் புத்தூர், நெடுவாசல் முதலிய கிராமங்களில் இருக்கின்றன. இவைகள் மூலமாகவும், மனைக்கட்டு, குளங்கள் மூலமாகவும் ஆண்டுதோறும் சுமார் ரூ. 8500 வருமானம் வரும். அரசியலார் மூலம் மோகினித் தொகையாக ரூபாய் 13—9—0 கிடைக்கிறது.

## 11. நிர்வாகம்.

இக்கோயிலின் நிர்வாகம் ஆதியில் தஞ்சை தேவஸ்தானக் கமிட்டியின் மேற்பார்வையில் இருந்து வந்தது. பிறகு 27—3—51லிருந்து சென்னை அறநிலையப் பாதுகாப்பு இலாகாவின் **(Hindu Religious and Charitable Endowments)** நேர் நிர்வாகத்தில் இருந்து வருகிறது, மேற்படி இலாகாவால் நியமிக்கப்பெற்ற நிர்வாக அதிகாரியும், தர்மகர்த்தர்களும் கோயில் காரியங்களைக் கவனித்து வருகிறார்கள்,

---



## 12. துதிப்பாடல்கள் (பொது)

### விநாயகர்

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான்—விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினால்
கண்ணிற் பணிமின் கனிந்து

### முருகப் பெருமான்

மூவிரு முகங்கள் போற்றி முகம்பொழி கருணை போற்றி
ஏவரும் துதிக்க நின்ற ஈராறு தோள்போற்றி காஞ்சி
மாவடிவைகும் செவ்வேள் மலரடிபோற்றி அன்னான்
சேவலும் மயிலும் போற்றி திருக்கைவேல் போற்றி போற்றி

### நக்கீரர் அருளிய துதி மொழி (திருமுருகாற்றுப்படை)

நெடும்பெருஞ்சிமயத்து நீலப்பைஞ்சுனை
ஐவருள் ஒருவன் அங்கை ஏற்ப
அறுவர் பயந்த ஆறு அமர் செல்வ
ஆல்கெழு கடவுள் புதல்வமால்வரை
மலைமகள் மகனே மாற்றோர் கூற்றே
வெற்றிவேல் போர்க் கொற்றவை சிறுவ
இழை அணி சிறப்பின் பழையோன் குழவி
வானோர் வணங்குவில் தானைத்தலைவ
மாலை மார்ப நூலறி புலவ
செருவில் ஒருவ பொருவிறல் மல்ல
அந்தணர் வெறுக்கை அறிந்தோர் [illegible]
மங்கையர் கணவ மைந்தர் ஏ[illegible]
வேல்கெழு தடக்கைச் சால்[illegible]ரும் செல்வ
குன்றம் கொன்ற குன்றுக்[illegible]ற்றத்து
விண்பொரு நெடுவரைக் [illegible]றிஞ்சிக் கிழவ
பலர்புகழ் நன்மொழிப் பு[illegible]வர் ஏறே

113035
MADRAS
157

அரும் பெறல் மரபிற் பெரும் பெயர் முருக
நசையினர்க்கு ஆர்த்தும் இசைபேர் ஆள
அலந்தோர்க்கு அளிக்கும் பொலம்பூண் சேய்
மண்டமர் கடந்தநின் வென்றடு அகலத்துப்
பரிசிலர்த் தாங்கும் உருகெழு நெடுவேள்
பெரியோர் ஏத்தும் பெரும் பெயர் இயவுள்
சூர்மருங்கு அறுத்த மொய்ம்பின் மதவலி
போர்மிகு பொருந குரிசில்

**அருணகிரிநாதர்பாடிய திருப்புகழ்**

வேலை தோற்க விழித்துக் காதினில்
ஓலைகாட்டி நகைத்துப் போதரு
வீடு காட்டி உடுத்தப்போர்வையை நெகிழ்வாகி
மேனிகாட்டி வளைத்துப் போர்முலை
யானைகாட்டி மறைத்துத் தோதக
வீறுகாட்டி எதிர்த்துப் போரெதிர் வருவார்மேல்
காலமேற்க உழப்பிக் கூறிய
காசுகேட்ட துகைப்பற் றுயிடை
காதி ஓட்டி வருத்தப் பாடுடன் வருவார்போல்
காதல்போற்று மலர்ப்பொற் பாயலின்
மீதணைப்பு மசட்டுச் சூளைகள்
காமநோயப்ப டுசித்தத் தீவினை ஒழியேனோ
ஆல கோட்டு மிடற்றுச் சோதிக
பாலி பார்ப்ப திபட்சத் தால்நட
மாடி தாத்திரிபட்சித் தாவென உமிழ்வாளி
ஆடல்கோத்த சிலைக்கைச் சேவக
னோடைபூத்த தளக்கட் சானுவி
யாறு தேக்கி யகற்றைச் சேகர சடதாரி
சீலமாப்ப திமத்தப் பாரிட
சேனை போற்றிடு மப்பர்க் கோதிய
சேதனுர்த்த ப்ரசித்திக் கேவரு முருகோனே



சேலருக்க யல்தத்தச் சூழ்பயல்
ஊரமேற்க ரவிப்ரர்க் காதர
தீரதீர்த்த **திருப்புத்தூரு**றை பெருமாளே.

விழிக்குத்துணைதிரு மென்மலர்ப் பாதங்கள் மெய்ம்மைகுன்று
மொழிக்குத்துணை முருகாவெனு நாமங்கள் முன்புசெய்த
பழிக்குத்துணையவன் பன்னிரு தோளும் பயந்ததனி
வழிக்குத்துணை வடிவேலும் செங்கோடன் மயூரமுமே,
(கந்தர் அலங்காரம்)

**நடராஜர்.**

உலகெலாம் உணர்ந்து ஓதற்கரியவன்
நிலவுலாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்.
(பெரிய புராணம்)

**சிவபெருமான்.**

பாங்கு நல்ல வரிவண்டிசைபாடத்
தேங்கொள் கொன்றைதிளைக்கும் திருப்புத்தூர்
ஓங்கு கோயில்உறைவார் அவர்போலும்
தாங்கு திங்கள் தவழ்புன் சடையாரே
நெய்தல் ஆம்பல் கழுநீர் மலர்ந்தெங்கும்
செய்கள்மல்கு சிவனூர் திருப்புத்தூர்த்
தையல்பாகம் மகிழ்ந்தார் அவர்போலும்
மையுள் நஞ்சம் மருவும் மிடற்றாரே
(திருஞானசம்பந்தர்)

மற்றிடமின்றி மனைதுறந்தல்லுணா வல்லமணர்
சொற்றிடமென்று துரிசுபட்டேனுக்கு முண்டுகொலோ
விற்றிடம் வாங்கி விசயனோடன் றொருவேடுவனாய்ப்
**புற்றிடங்கொண்டான்**றன் தொண்டர்க்குத்தொண்டராம்
புண்ணியமே

புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா உன்னடி என்மனத்தே
வழுவாதிருக்க வரந்தரவேண்டும் இவ்வையகத்தே
தொழுவார்க்கிரங்கி யிருந்தருள் செய்**பாதிரிப்**புலியூர்ச்
செழுநீர்ப் புனற்கங்கை செஞ்சடைமேல் வைத்ததீவண்ணனே

கருவாய்க் கிடந்துன்கழலே நினையுங் கருத்துடையேன்
உருவாய்த் தெரிந்துன்றன் நாமம்பயின்றேன் உனதருளால்
திருவாய் பொலியச் சிவாயநமவென்று நீறணிந்தேன்
தருவாய் சிவகதி நீ**பாதிரிப்**புலியூர்அரனே
(திருநாவுக்கரசர்)

அங்கணைந்தமர்ந் தருளுவார் அரநெறிஅமர்ந்த
செங்கணேற்றவர் சேவடிவணங்கிமுன் திளைத்துப்
பொங்குபேரொளிப் **புற்றிடங்கொண்டவர்** புனிதப்
பங்கயப்பதந் தொழுது காலந்தொறும்பணிந்தார்

பூங்கோயில் அமர்ந்தாரைப் **புற்றிடங்கொண்டிருந்தாரை**
நீங்காத காதலினால் நினைந்தாரை நினைவாரைப்
பாங்காகத் தாம் முன்பு பணியவரும் பயன்உணர்வார்
ஈங்கு நான் மறந்தேன் என்று ஏசறவால் மிகஅழிவார்
(பெரிய புராணம்)

## தேவியார்

மனிதருந் தேவரும் மாயா முனிவரும் வந்து சென்னி
குனிதருஞ் சேவடிக் கோமளமே கொன்றைவார் சடைமேல்
மனிதரும் திங்களும் பாம்பும் பகீரதியும் படைத்த
புனிதரும் நீயும் என் புந்தியெந்நாளும் பொருந்துகவே
(அபிராமி அந்தாதி)

மூவர்க்கும் முதற்பொருளாய் முத்தொழிற்கும் வித்தாகி
நாவிற்கும் மனத்திற்கும் நாடரிய பேரறிவாய்த்
தேவர்க்கும் முனிவர்க்கும் சித்தர்க்கும் நாகர்க்கும்
யாவர்க்கும் தாயாகும் எழிற்பரையை வணங்குவாம்
(பதிபசுபாச விளக்கம்)



## தக்ஷிணாமூர்த்தி

மும்மலம் வேறுபட்டொழிய மொய்த்துயிர்
அம்மலர்த்தாள் நிழல் அடங்கும் உண்மையைக்
கைம்மலர்க்காட்சியின் கதுவ நல்கிய
செம்மலை அலதுளம் சிந்தியாதரோ
(திருவானைக்கா புராணம்)

## நால்வர்

பூழியர்கோன் வெப்பொழித்த
புகலியர்கோன் கழல் போற்றி
ஆழிமிசைக் கல்மிதப்பில்
அணைந்தபிரான் அடிபோற்றி
வாழிதிரு நாவலூர்
வன்றொண்டர் பதம் போற்றி
ஊழிமலி திருவாத
ஊரர் திருத்தாள் போற்றி

## ஸ்ரீ புற்றிடங் கொண்டார் பொன்னடி போற்றி

நாளென் செய்யும் வினைதான் என்செயுமெனை நாடிவந்த
கோளென்செயும் கொடுங்கூற்றன் செயுங் குமரேசரிரு
தாளும் சிலம்புஞ் சதங்கையுந் தண்டையுஞ் சண்முகமும்
தோளும் கடம்பும் எனக்கு முன்னே வந்து தோன்றிடினே
(கந்தர் அலங்காரம்)

## கோளறு திருப்பதிகம்

வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணைதடவி
மாசறு திங்கள் கங்கை முடிமேலணிந்தென்
உளமே புகுந்த அதனால்

ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி
சனிபாம் பிரண்டு முடனே
ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே

**வாழ்த்து**

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரன் நாமமே
சூழ்க வையகமும் துயர் தீர்கவே

113035

வெற்றிவேற் பதிப்பகம், தெற்கலங்கம், தஞ்சாவூர்.

